MC.16/2025

21.01.2026

RW1 – சுரேஷ்பாபு த/பெ.குழந்தைஇ வயது–40

மனுதாரர் ஆஜர்.

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் –11.33 A.M.

விசாரணை முடிக்கப்பட்டநேரம் –11.50 AM.

Solemnly affirmed by Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathu in accordance with the provision of Act X of 1873 of the day of 21.01.2026

(குற்றவியல் நடைமுறை சட்டம் 2019 விதி 43(2)ன் கீழ் சாட்சிக்கு அவரது முதன்மை சாட்சியம் நினைவுக்கூர்வதற்காக படித்து சொல்லப்பட்டது)

மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-

இவ்வழக்கில் முதல் மனுதாரர் உங்கள் மனைவி எனவும் மற்ற இரு மனுதாரர்கள் உங்களுடைய மகள்கள் என்றால் சரிதான். நீங்கள் என்ன வேலை செய்கிறீர்கள் என்றால் கூலி வேலை செய்கிறேன். மனுதாரர்கள் தரப்பில் நீங்கள் கூலி வேலை செய்யவில்லை எனவும் பெரிய ே◌ஹாட்டலில் சமையல் மாஸ்டராக பணி செய்து மாதம் ரூ.30,000/-கும் கூடுதலாக சம்பாதித்து வருவதாக சொல்கிறார்கள் என்றால் சரியல்ல. உங்களுடைய ஊர் ஏலகிரி மலையில் உள்ள மஞ்சங்கொள்ளை புதூர் கிராமம் என்றால் சரிதான். உங்களுடைய ஊரில் உங்களுக்கு சுமார் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் உள்ளது என்றால் தவறு. இரண்டு மற்றும் மூன்றாம் மனுதாரர்கள் என்ன படித்து வருகிறார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் நான் அவர்களிடம் இருந்து ஆறு வருடத்திற்கு மேல் தொடர்பில்லாத காரணத்தினால் எனக்கு அந்த விவரம் தெரியாது. நீங்கள் மனுதாரர்களை பிரிந்திருந்த ஆறு வருட காலத்தில் உங்களுடைய குழந்தைகளின் படிப்பு மற்றும் பராமரிப்பு செலவு எதுவும் நீங்கள் செய்யவில்லை என்றால் சரிதான். நீங்கள் உங்களுடைய முதல் விசாரணை சாட்சியத்தில் முதல் மனுதாரர் ரமேஷ் என்பவருடன் தகாத தொடர்பு வைத்துள்ளதாக பொய்யான சங்கதி சொல்லியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல அது உண்மை சங்கதி தான். முதல் மனுதாரருக்கு ஜீவனாம்சம்

கொடுப்பதிலிருந்து தப்பிப்பதற்காக வேண்டி அவருக்கு எதிராக எதிருரையிலும் உங்கள் முதல் விசாரணையிலும் பொய்யான சங்கதி சொல்லியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. HMOP.No.23/2021 என்ற வழக்கில் முதல் மனுதாரர் ஜீவனாம்சம் இல்லாமல் விவாகரத்து பெற்றுக்கொள்ள சம்மதம் என்று உங்கள் முதல் விசாரணை சாட்சியத்தில் பத்தாம் பத்தியில் சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். சார்பு நீதிமன்றத்தில் மேற்படி வழக்கில் முதல் மனுதாரர் ஜீவனாம்சம் கோரினால் விவாகாரத்து தரமாட்டேன் என்று சொல்லி அவரை மிரட்டி விவாகாரத்துக்கு சம்மதம் பெற்றீர்கள் என்று சொன்னால் அது தவறான சங்கதி. முதல் மனுதாரருக்கும் உங்களுக்கும் நடந்த திருமணம் விவாகாரத்து ஆன பிறகும் முதல் மனுதாரர் திருமணம் செய்துக்கொள்ளாமல் உள்ள காரணத்தினால் நீங்கள் அவருக்கு ஜீவனாம்சம் வழங்க கடமைப்பட்டுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. இரண்டு மற்றும் மூன்றாம் மனுதாரர்கள் உங்களுடைய மகள்கள் என்ற காரணத்தினால் அவர்கள் இருவருக்கும் ஜீவனாம்சம் வழங்க கடமைப்பட்டுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur
Date: 2026.01.21 15:54:58 +0530

Chief Judicial Magistrate,
Tirupathur.